டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.8.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 054- Madurai | Online Edition

# ரசாயனங்கள் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் குறித்த 13வது சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு அகமதாபாத்தில் நடந்தது

புது தில்லி, ஆக.21

இந்தியா கெம் 2024 ஐ முன்னிட்டு, ரசாயனங்கள் மற்றும் பெட்ரோகெமிக்கல்ஸ் குறித்த 13-வது சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு, மத்திய ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்புடன் (FICCI) இணைந்து, அகமதாபாத்தில் நேற்று முன்தினம் ஒரு தொழில்துறை கூட்டத்தை நடத்தியது. ஈராண்டுக்கு ஒரு முறை இந்த மாநாடு நடைபெறுகிறது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலன், ரசாயனம் மற்றும் உரங்கள் துறை இணையமைச்சர் அனுப்ரியா படேல் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இந்தியாவின் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார தொலைநோக்கு பார்வையை அடைவதில் ரசாயனத் தொழிலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கூட்டத்தினரிடையே உரையாற்றிய அனுப்பிரியா படேல், ரசாயனம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறையை மத்திய அரசு முன்னுரிமைத் துறையாகக் கருதுவதாகக் கூறியதுடன், இடையூறுகளைக் குறைக்கவும், இணக்கங்களின் சுமையைக் குறைக்கவும், முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்கவும் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

இத்துறையில் குஜராத்தின் முக்கிய பங்களிப்பைப் பாராட்டிய அவர், 'இந்தியாவின் தொழில்துறை நிலப்பரப்பில், குறிப்பாக ரசாயனம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகளில் குஜராத் முன்னணியில் நிற்கிறது. இந்தியாவின் பெட்ரோ கெமிக்கல் உற்பத்தியில் 62% பங்கையும், ரசாயன உற்பத்தியில் 53% பங்கையும், மருந்து உற்பத்தியில் 45% பங்கையும் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட குஜராத் தொழில்துறை அமைச்சர் பல்வந்த்சிங் ராஜ்புத், இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்துவதில் மாநிலத்தின் முக்கிய

பங்கை எடுத்துரைத்து, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் பங்கு 8.4% மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தி உற்பத்தியில் 18% பங்கைக் கொண்டுள்ளது என்றார். இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 33 சதவீத பங்களிப்பை இந்த மாநிலம் கொண்டுள்ளது. குஜராத்தை உலகளாவிய மையமாக ஊக்கு வித்தல், புதிய முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் நிலையான நடை முறைகளுடன் ஒத்துப்போகும் புதுமைகளை காட்சிப்படுத்துதல் ஆகியவற்றில் தொழில்துறை சந்திப்பு கவனம் செலுத்தியது. தொழில்துறை தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்களுக்கு துறையின் எதிர்காலம் பற்றி விவாதிக்கவும் கூட்டு வாய்ப்புகளை ஆராயவும் இது ஒரு தளமாக செயல்பட்டது.

தொழில்துறை கூட்டத்தில் இந்திய அரசின் ரசாயனம் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் துறை செயலாளர் நிவேதிதா சுக்லா வர்மா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.




ஆகஸ்ட் 20 அன்று அகமதாபாத்தில் நடந்த தொழில்துறை சந்திப்பு, மும்பையில் அக்டோபர் 17-19 தேதிகளில் திட்டமிடப் பட்டுள்ள இந்தியா கெம் 2024 ஐ நோக்கி வேகத்தை உருவாக்கு வதை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான நிகழ்வுகளின் ஒரு பகுதியாக இருந்தது. முக்கிய நிகழ்வு உலகளாவிய ரசாயனம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகளில் சமீபத்திய தொழில் நுட்பங்கள், கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தும். தொழில்துறை யின் எதிர்காலத்திற்கு முக்கியமான கொள்கை சிக்கல்கள், ஒழுங்கு முறை கட்டமைப்புகள் மற்றும் நிலையான நடைமுறைகள் குறித்து விவாதிப்பதற்கான ஒரு தளத்தையும் இந்த நிகழ்வு வழங்கும்.

இந்திய அரசின் ரசாயனம் மற்றும் பெட்ரோலிய ரசாயனத் துறையின் இணைச் செயலாளர் தீபங்கர் அரோன், குஜராத் அரசின் தொழில் மற்றும் சுரங்கத் துறை முதன்மைச் செயலாளர் மம்தா வர்மா, ஃபிக்கியின் தேசிய வேதியியல் குழுவின் தலைவர் தீபக் சி. மேத்தா, ஃபிக்கி குஜராத் மாநில கவுன்சிலின் தலைவர் ராஜீவ் காந்தி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஆலங்குடி உழவர் உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகள் கருத்தரங்கம்



புதுக்கோட்டை, ஆக.21

அனவயல் கிராமத்தில் ஆலங்குடி உழவர் உற்பத்தி யாளர் நிறுவனத்தின் மூலம் விவசாயிகளுக்கு கருத்தரங்கு நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் துணை இயக்குனர் ரா.ஜெகதீஸ்வரி கருத்தரங் கிற்கு தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதினால் பெறப்படும் லாபம் குறித்தும் பேசினார். E-NAM பயன்பாடுகள், பண்ணை வாயில் வர்த்தகம், அலைப்பேசி செயலிகள் மூலம் விவசாயிகள் துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பூச்சி நோய் தடுப்பு முறைகளை தெரிந்து கொள்ளும் முறைகள் குறித்தும் செயல்விளக்கம் வாயிலாக விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குனர் மதியழகன், கலந்து கொண்டு விதைகளை தேர்வு செய்யும் முறைகள் பருவத்திற்கு ஏற்ற விதைகள் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடம் தெரிவித்தார். வேளாண்மை அலுவலர் சுபாஷினி, கலந்து கொண்டு விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட் களை தங்கு தடை இன்றி விற்பனை செய்வதற்கு ஏற்ற வழிமுறைகள் குறித்து விவசாயிகளிடம் தெரிவித்தார். ரிலையன்ஸ் பவுண்டேஷன் சார்பாக அன்பழகன், கலந்து கொண்டு விவசாயிகள் இயற்கை முறையில் சாகுபடி செய்வதினால் ஏற்படும் நன்மைகள் குறித்து தெரிவித்தார்.

ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனை கூட இளநிலை உதவி யாளர் அழகிரிசாமி, ஆலங்குடி ஒழுங்கு முறை விற்பனை கூட செயல்பாடுகள் குறித்து விவசாயிகளிடம் தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

முன்னதாக ஆலங்குடி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் மேனகா சுந்தரி, அனைவரையும் வரவேற்றார். உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குனர் பார்த்தசாரதி, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல் பாடுகள் குறித்து தெரிவித்தார். கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் சக்திவேல் நன்றி தெரிவித்தார்.




## மாதாந்திர பணிமனைக் கூட்டத்தில் பங்கேற்ற காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் மாணவிகள்



மதுரை, ஆக.21

திண்டுக்கல் மாவட்டம், காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளங் கலை வேளாண்மை பயிலும் இறுதியாண்டு மாணவிகள் சீ.மோனிகா, ப.கீர்த்தனா, கொ.மோ.பிரேமலதா, ஜோ.அமலயோஷ்னி மற்றும் ஆ.இந்துமதி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மாதாந்திர பணிமனைக் கூட்டத்தில் பங்கேற்று அங்கு எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களை கேட்டறிந்தனர். இதன் மூலம் அக்கூட்டத்தின் முக்கியத்துவத்தையும் அறிந்தனர்.

# நோய் மேலாண்மையில் பசுந்தாள் உரப்பயிர்களின் பங்கு

மண்ணின் வளத்தைப் பாதுகாக்க, கரிமச்சத்தின் அளவை அதிகரிப்பதும் நிலை நிறுத்துவதும் மிக அவசியம். பசுந்தாள் உரப்பயிர்களான கொளிஞ்சி, சணப்பு, தக்கைப் பூண்டு, நரிப்பயறு மற்றும் தட்டைப்பயிறு ஆகியவற்றைப் பயிரிடும் போது கரிமச் சத்தின் அளவை அதிகரிக்கவும், களைகளை குறைக்கவும் மற்றும் மண்ணரிப்பைக் குறைக்கவும் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் அறிவோம்.

பசுந்தாள் உரப்பயிர்களை இயற்கை உரமாக பயன்படுத்தும் போது அவை மண்ணிலிருக்கும் பெரும்பாலான நோய்க் காரணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக வேர் வாடல் மற்றும் வேர் அழுகல் நோய்களை உண்டாக்கிடும் பூஞ்சைகளின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்திருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

பசுந்தாளுரப் பயிர்கள் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளான ட்ரைக்கோடெர்மா சூடோமோனாஸ், பேசில்லஸ் போன்றவற்றை ஊக்குவித்து பயிர் நோய்களின் தாக்கத்தினை குறைத்திருப்ப தாகவும் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

பசுந்தாள் உரப்பயிர்கள் பயிர்களில் நோய்களை தோற்று விக்கும் நோய்க்காரணிகளின் எண்ணிக்கையைக் குறைப் பதிலும், நோய்வித்துக்கள் முளைப்பதைக் குறைப்பதிலும், முளைக்கப்பட்ட நோய்க்காரணிகளின் வித்துக்களை செயல் இழக்கச் செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மேற்கண்ட பசுந்தாள் உரப்பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு மண்வளத்தை மேம்படுத்தி மறைமுறைமாக நோய்க் காரணி களைக் கட்டுப்படுத்தி மகசூலையும் அதிகரிக்கலாம் என திண்டுக்கல் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் ம.ச.சந்திரமாலா தெரிவித்து உள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 21.08.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 28 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (கோலார்) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 56 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 65 |
| 2 | வெண்டை | 20 | 24 | 58 | மேரக்காய் | 20 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 35 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 18 | 60 | கேரட் | 85 | 90 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 38 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 42 | 48 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 20 | 25 | 63 | டர்னிப் | 30 | 34 |
| 8 | சுரைக்காய் | 22 | 26 | 64 | மு.கோஸ் | 35 | 38 |
| 9 | பாகற்காய் | 28 | 32 | 65 | மு.கோஸ்(கலர்) | 40 | 45 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காளிபிளவர் | 42 | 48 |
| 11 | பூசணி | 25 | 30 | 67 | பட்டாணி | | |
| 12 | அரசாணி | 20 | 24 | 68 | பூண்டு | 190 | 285 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 48 | 69 | இஞ்சி | 60 | 128 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 46 | 70 | புருக்கோலின் | 180 | 200 |
| 15 | சி.வெங்காயம் | 35 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 50 |
| 16 | பெ.வெங்காயம் | 40 | 43 | 72 | குடமிளகாய் | 48 | 58 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | ஊட்டி அவரை | | |
| 18 | பச்சை மொச்சை | 35 | 38 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 35 | 38 | 71A | | | |
| 20 | தேங்காய் | 32 | 35 | | | | |
| 21 | மாங்காய் | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 45 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 65 | 68 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 0 | 0 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா | 45 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 34 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 44 | 80 | திராட்சை | 110 | 120 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 40 | 45 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 25 | 30 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 35 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | 30 | 32 |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 30 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 30 | 97 | செவ்வாழை | 85 | 90 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | புளி | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 40 | 45 | 104 | நாவல் | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 28 | | | | |

# கிராமம் தழுவிய விவசாயிகள் பயிற்சி



திண்டுக்கல், ஆக.21

திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரக உழவர் பயிற்சி நிலையம் சார்பில் திண்டுக்கல் வட்டார விவசாயிகளுக்கு கிராமம் தழுவிய விவசாயிகள் பயிற்சி திண்டுக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குநர் போது தலைமையேற்று அரசின் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் அதில் பயனடையும் முறைகள் பற்றி கூறினார்.




உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ரேஷ்மா குறைந்த செலவில் இரசாயன இடுபொருட்கள் இன்றி பயிர் மேலாண்மை செய்யும் இனக்கவர்ச்சி பொறி, விதை நேர்த்தி மற்றும் பயிர் ஊக்கிகள் தொடர்பான தகவல்களை எடுத்துரைத்தார்.

வட்டார வேளாண்மை அலுவலர் அறிவழகன் வேளாண்மை கிடங்கில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படும் பசுந்தாள் உரவிதை, துவரை, உளுந்து விதைகள் வாங்கும் முறை சார்ந்தும் மானியத் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு கூறினார்.

மேலும், தோட்டக்கலைத் துறை சார்பாக உதவி தோட்டக்கலை அலுவலர் விக்னேஷ்குமார் மானியத் திட்டம், வாழைக்கன்றுகள், மண்புழுஉரம் தயாரிப்பு நுண்ணீர் பாசனம் பதிவு கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தேனி மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தில் தொழில் முனைவோர்கள் கூட்டம்



தேனி, ஆக.21

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரம், காமாட்சிபுரத்திலுள்ள சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் மாதாந்தர தொழில் முனைவோர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் சேர்மன் முனைவர் பெ.பச்சைமால் தலைமையாற்றி தொழில் முனைவோர்களுக்கான வேளாண் அறிவியல் மையத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கமளித்தார்.

மதுரை மாவட்ட சிறு, குறு நடுத்தர நிறுவனத்தின் (எம்.எஸ்.எம்.இ) உதவி இயக்குனர் சரவணன் சிறப்புரையாற்றி எம்.எஸ்.எம்.இ திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார். மேலும் தேனி மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குநர் மோகன்ராஜ் சிறப்புரையாற்றி மாவட்ட தொழில் மையத்தின் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார். சீப்பாலக்கோட்டை யூனியன் வங்கியின் மேலாளர் தினு மற்றும் உதவி மேலாளர் இராஜாசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டு தொழில் முனைவோர்களுக்கான வங்கித் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர்கள் கலந்து கொண்டு பொருட்களை காட்சிப்படுத்தினார்கள். காட்சிப் படுத்தப்பட்ட பொருட்களாவது காளான் சார்ந்த பொருட்கள், முருங்கை சார்ந்த பொருட்கள், மூலிகை ஊறுகாய் வகைகள், எண்ணெய் வகைகள், மாசாலப் பொடிகள், மூலிகைப் பொருட்கள், உடனடி ஊட்டச்சத்து கலவைகள், பழலெதர், நெல்லிப் பொருட்கள் மற்றும் சிறுதானியப் பொருட்களாகும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

மேலும் முன்னிலை செயல்விளக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக பெரியகுளம் வட்டாரம் குள்ளப்புரத்தைச் சேர்ந்த தென்னை விவசாய உழவர் ஆர்வலர் குழுவிற்கு பயிற்சி அளித்து இலவசமாக தென்னை மரம் ஏறும் கருவி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவில் வேளாண் அறிவியல் மையத்தின் மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் ம.இரம்யாசிவசெல்வி நன்றியுரையாற்றினார்.



# அங்கக வேளாண்மையில் நூற்புழு மேலாண்மை

● பயிர்களில் பூச்சி மற்றும் நோய்க்கு இணையான சேதாரத்தை நூற்புழுக்களும் விளைவிக்கின்றன.

● கோடை உழவு செய்வதன் மூலம் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

● மண்ணை மூடாக்கு போட்டு வெப்பமூட்டுதல் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● வேப்பம் புண்ணாக்கு ஒரு எக்டருக்கு 250 கிலோ இடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● ஊடுபயிராக துலுக்கசாமந்தி, வெங்காயம், சணப்பு, கொத்தமல்லி, பூண்டு ஆகியவற்றைப் பயிரிடுவதால் கட்டுப்படுத்தலாம்.

● நாற்றங்கால் படுக்கைகளில் NSKE 5% தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

● பேசிலோமைசிஸ் லிலாசினஸ் (1% WP) உயிர் நூற்புழுக் கொல்லியை கீழ்கண்டவாறு பயன்படுத்துவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

1. விதைநேர்த்திக்கு 1 கிலோ விதைக்கு 10 கிராம் உயிர் நூற்புழு கொல்லி பயன்படுத்த வேண்டும்.

2. ஒரு லிட்டர் நீரில் 100 கிராம் உயிர் நூற்புழு கொல்லி கலந்து நாற்று நனைக்க பயன்படுத்த வேண்டும்.

எக்டருக்கு 5 கிலோ உயிர் நூற்புழு கொல்லியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து பயன்படுத்த வேண்டும். மேற்கண்ட முறைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்தும்போது அங்கக வேளாண்மையில் சிறந்த நூற்புழு கட்டுப்பாடு கிடைக்கும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மானாவாரி நெல் விதைப்பு!



தற்போது தொடர்ச்சியான மழை பெய்து வருவதால் தென் மாவட்டங்களில், குறிப்பாக இராமநாதபுரம், சிவகங்கை பகுதியில் மானாவாரியாக புழுதி (வர) விதைப்பு தொடங்கும் நிலையில் உள்ளது. மானாவாரி விதைப்பு பொதுவாக ஆகஸ்ட்–செப்டெம்பர் மாதங்களில், ஆரம்பமாகும். முதலில் மானாவாரி நெல் விதைப்பில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை பார்ப்போம்.

**மானாவாரியாக விதைக்க ஏற்ற நெல் இரகங்கள்**

அண்ணா (R) 4, மதுரை 5, 6 ஆடுதுறை 36, 53, கோ 51, TKM13 VGD 1, ஜோதி மட்டை.

**விதை அளவு :** ஏக்கருக்கு 30–40கிலோ

**விதை நேர்த்தி**

**1) விதையை கடினப்படுத்துதல் (SEED HARDENING)**

வறட்சி தாங்கி செழிப்பாக வளர இந்த விதை நேர்த்தி மானாவாரி நெல் பயிருக்கு அவசியமாகிறது. ஒரு கிலோ நெல்லுக்கு 10 கிராம் பொட்டாஷ் என்றளவில் 1 லிட்டர் தண்ணீர் என்ற விகித்தில் கலந்து 16 மணி நேரம் ஊற வைத்து பின் வடித்து நிழல் காய்ச்சலில் காயவைத்து நெல் கடுக்கென சப்தம் கேட்கும் வரை காயவைத்து விதைக்க வேண்டும்.

**2) பூஞ்சான விதை நேர்த்தி**

கடினப்படுத்தப்பட்ட விதைகளை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டி.விரிடி / 10 கிராம் சூடாமானஸ் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும்.

**நிலத் தயாரிப்பு**

நிலத்தை சித்திரை மாதம் முதல் உழவு போட்டு கிடை போட்டு நன்றாக உழது நெல் விதைப்புகேற்ற வகையில் தயாராக வைக்க வேண்டும். மண் பரிசோதனை படி அடியுரம் இடவேண்டும். விதைப்பு விதை விதைக்கும் கருவி கொண்டு வரிசையாக விதைத்தால் களை எடுப்பது எளிது. அதுமட்டுமல்லாது பயிர் எண்ணிக்கையும் சரியாக பராமரிக்கப்படும். இடைவெளி 15x10 செ.மீ என்றால் ஒரு சதுர மீட்டருக்கு 66 குத்துகளும் (HILLS) 20x10 செமீ என்றால் சதுர மீட்டருக்கு 50 குத்துகளும் பயிர் இருக்க வேண்டும்.

**உர அளவு :** தொழு உரம் ஏக்கருக்கு 5 டன் / இடவேண்டும். பொது உர பரிந்துரையாக (NPK) 20:10:10 என்ற அளவில் இட வேண்டும். ஏக்கருக்கு 1 முட்டை ஜிப்சம் இடவேண்டும்.

**பயிர் களைதல் :** விதைக்கும் போது ஒரு சில இடங்களில் கும்பலாகவும் ஒரு சில இடங்களில் பயிர் இல்லாத நிலையில் பயிர்களை பிடுங்கி 12-15 நாளில் நடவேண்டும் (GAP FILLING) விதைத்த 2-3 இலை வந்தவுடன் களைக்கொல்லியாக நாமினி கோல்டு (பிஸ்பைரிபாக் சோடியம்) ஏக்கருக்கு 100 ML 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

மானாவாரியாக விதைப்பு செய்வதில் விவசாயிகள் மேலே கண்ட தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு விபரங்கள் விரைவில் தகவல் தரப்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# ஊட்டச்சத்து குறைந்த உற்பத்தி பகுதிகளில் உள் மாவட்ட அளவிலான பயிற்சி

சிவகங்கை, ஆக.21

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரத்தில் பெரும்பச்சேரி கிராமத்தில் வேளாண்மைத்துறை அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 19.8.24 அன்று நடைபெற்றது.



இப்பயிற்சியில் இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மு.தங்கபாண்டியன் தலைமையேற்று விவசாயிகளுக்கு விவசாயிகள் அனைவரும் மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தை அறியவும் ஊட்டச்சத்து குறைந்த உற்பத்தி பகுதிகளில் பண்ணை மண் பாதுகாப்பது குறித்து விவசாயிகள் மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடவும், அதன் மூலம் உரச்செலவை குறைக்கவும் போன்ற மண்வள மேம்பாடு குறித்து தொழில் நுட்பங்களை விரிவான முறையில் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகளுக்கு செடியின் வளர்ச்சிக்கு தேவைப்படும் அடிப்படை ஊட்டச்சத்துகளான தழைசத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்கள் செடிக்கு கிடைக்கும் நிலையில் அமைந்துள்ள மண் வளமான மண் ஆகும், மேலும் வளமான மண் ஆழமான மண் அமைப்புடன் இருக்கும் என்று மண் வள மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் ரஜேஷ் விவசாய ஆலோசகர், மதுரை விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் பயன்கள் பற்றி எடுத்துக்கூறினார். மழை காலத்தில் மண் அரிப்பை தடுக்கிறது தூய்மையான நிலத்தடி நீருக்கும் மண் வள மேம்பாட்டிற்க்கும் வித்திடுகிறது. பயிர் வளர்ச்சி ஊக்கியாக செயல்படுகிறது.

மண்வள அட்டையை பயன்படுத்தி உரங்கள் இடுவதினால் மண்ணின் வளம் மேம்படும் மேலும் மண் வள அட்டைஎன்பது மண்ணின் தன்மை பாசன நீர் பயிர் மற்றும் பிற உயிரியல் பண்புகளின் அடிப்படையில் மண்ணின் வளத்தையும் தரத்தையும் இந்த மண்வள அட்டை நிர்ணயிக்கிறது.

இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் இரா.கௌசல்யா பயிற்சயில் கலந்து கொண்டு, மண்ணின் இயற்கை தன்மையை பராமரித்தல், மண் நுண்ணுயிர்களின் செயல்பாட்டினை அதிகரித்தல் கவனமாக இயந்திர ஊடுருவல் இவைகளின் மூலம் மண் வளத்தை நீண்ட நாள் பாதுகாத்தல் என்று எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி.கோகிலா, ஒவ்வொரு பயிர் வளர்வதற்கும் அடிநாதமாக இருப்பது விதைகள். எனவே தரமான நாட்டு விதைகளை பயன்படுத்தி நெல் உட்பட பல தானியங்களை விளைவிப்பதே இயற்கை வேளாண்மையின் அடிப்படை ஆகும் என்று விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ் செய்தார்.



# உயிர்ம பருத்தி சாகுபடியில் நோய் மேலாண்மை!

பருத்தியில் வேர் வாடல் நோய், வேர் அழுகல் நோய், இலைப் புள்ளி நோய் பாக்டீரியா இலை கருகல் நோய் வைரஸ் நோய் போன்றவை முக்கியமானவையாகும். அங்ககப் பருத்தியில் தோன்றும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**பஞ்சு நீக்கப்பட்ட விதைகள் :** பருத்தியில் தோன்றும் பெரும் பாலான நோய்க் காரணிகள் பஞ்சுள்ள விதைகளின் மூலம் பரவுவதால் பஞ்சு நீக்கப்பட்ட தாமான சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளையே விதைக்கப் பயன்படுத்திட வேண்டும்.

**விதை நேர்த்தி :** ஃபியூசேரியம் வாடல் நோய் வெட்டிசிலியம் வாடல் நோய் வேரழுகல் நோய் போன்றவை விதைகளின் மூலமும் பரவும் என்பதால் விதைகளைப் பேசில்லஸ் சப்டில்லிஸ் (10 கிராம்/கிலோ) அல்லது டிரைக்கோடெர்மா அஸ்பரில்லம் (4 கிராம் / கிலோ) கொண்டு விதை நேர்த்திச் செய்து விதைக்கப் பயன்படுத்தவனம்.

**நுண்ணுயிரிகள் :** வேர் வாடல் மற்றும் வேரழுகல் நோய்களைக் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு ஒரு கிலோ டிரைக்கோடெர்மா அஸ்பரில் லத்தை 100 கிலோ மக்கிய தொழுஉரம் அல்லது 100 கிலோ மண்புழு உரத்துடன் கலந்து நிழலான இடத்தில் 65 சதவிகிதம் ஈரப்பதத்துடன் 15 நாட்கள் வைத்திருந்து விதைக்கும் போது ஒரு முறையும், விதைத்த 90 வது நாளில் மற்றுமொரு முறையும் வயலில் சீராக இடவேண்டும்.

**போர்டோ கலவை :** வேரழுகல் மற்றும் வேர்வாடல் நோய்களைக் கட்டுப்படுத்திட ஒரு சதவிகிதப் போர்டோ கலவையைப் பாதிக்கப்பட்ட செடிகளைச் சுற்றி ஊற்ற வேண்டும்.

**நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை ஊக்குவித்தல் :** வேரழுகல் மற்றும் வேர்வாடல் நோய்களுக்கு எதிர்வினையாற்றும் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை ஊக்குவிக்கும் பொருட்டுப் பரிந்துரைக் கப்பட்ட தொழுஉரத்துடன் (5 டன்/ஏக்கர்) 100 கிலோ வேப்பம் புண்ணாக்கினை கலந்து கடைசி உழவின் போது இட்டு விதைக்கவும்.

**நச்சுயிரி நோய் :** பருத்தி நெக்ரோசிஸ் நச்சுயிரி நோய் இலைப் பேன்களாலும், பருத்தி இலை சுருட்டு நச்சுயிரி நோய் வெள்ளை ஈக்களாலும் பரப்பப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்திட வேப்பங் கொட்டைச் சாறு (5%) வேப்பெண்ணெய் (3%) இஞ்சி–பூண்டு–பச்சை மிளகாய்க் கரைசல் (5%) ஐந்திலைக் கரைசல் (5%) போன்ற வற்றைப் பயன்படுத்தலாம் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் கூறினார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# சம்பா நெல் சாகுபடிக்கு உயர் விளைச்சல் தரும் ரகங்களை தேர்ந்தெடுங்கள்

புதுக்கோட்டை, ஆக.21

சம்பா நெல் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு ஏற்ற உயர் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அவசியம் என விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர் மு.மதியழகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் மு.மதியழகன் கூறிய தாவது : பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேளாண் பொருட்கள் உற்பத்தியை பன்மடங்கு பெருக்க வேண்டியது இன்றைய தேவை-யாகும். விதைகள், உற்பத்தியை பெருக்குவதிலும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நெல் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ள விவசாயப் பெருமக்கள் நம் பகுதிக்கு ஏற்றவாறு உயர் விளைச்சல் தரக்கூடிய சான்று பெற்ற நெல் ரகங்களை தேர்வு செய் துஅதற்கேற்ற சாகுபடி தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் சராசரி மகசூலைவிட 10 முதல் 20 சதவீதம் மகசூல் அதிகமாக பெற முடியும். உயர் மகசூல் பெற அடிப்படை நல்ல தரமான விதைகளே. தரமான சான்று விதைகள் உற்பத்தியை பெருக்குவதிலும் அதனை நிர்வகிப்பதிலும் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர் மச்சான்றளிப்பு துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

இத்துறையின் மூலம் சான்று செய்யப்பட்ட நீண்ட கால சம்பா நெல் ரகங்களான சி.ஆர்.1009 சப்–1,சாவித்திரி மற்றும் ஆடுதுறை 51 போன்றவை ஒரு போகமாக சாகுபடி செய்யப்பட உள்ள பகுதி களுக்கு ஏற்றவையாகும். பின் சம்பா, தாளடி பருவத்திற்கு FTKM-13, ADT-39, மற்றும் ADT-54 போன்ற ரகங்கள் பின் சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு ஏற்றவையாகும்.

நெல் விதை வாங்கும் போது கவனிக்கப்படவேண்டியவை : விதைச்சான்றளிப்பு துறையினரால் வழங்கப்பட்டிருக்கும் சான்று அட்டைபொருத்தப்பட்டிருக்கிறதா என்பதை கவனித்து வாங்க வேண்டும். எவ்வித விவரம் இல்லாமல் மூட்டைகளில் விற்பனை செய்யப்படும் விதையை வாங்கக் கூடாது. சான்று அட்டைகளில் பயிரின் ரகம், விதைப்பரிசோதனை நாள், காலக்கெடு தேதி போன்ற விவரங்கள் இருக்கும். இதன் மூலம் காலவதியான விதையை வாங்குவதை தவிர்க்கலாம்.

விதை பையின் மீது விதைச்சான்று துறையின் முத்திரைச் சின்னம், வாசகங்கள் காணப்படாமலும்,சான்று அட்டை இல்லாமலும் இருந்தால் அவ்விதைகளை வாங்கக்கூடாது. விதை வாங்கும் போது அதற்குண்டான ரசீது கேட்டுப் பெறுவது மிக அவசியம் ஆகும்.

சில நெல் ரகங்கள் குறிப்பிட்ட தட்பவெப்ப நிலையில் மட்டுமே நன்றாக வளர்ந்து நல்ல மகசூலை கொடுக்கும். பிற மாநில நெல் ரகங்களை தேர்வு செய்யும் போது மிக கவனமாகவும், நம் பகுதிக்கு ஏற்புடையதாக உள்ளனவா என்பதை உறுதி செய்து பயிரிட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் ரகம் விவசாயிகளுக்கும், விற்பனைக்கும் ஏற்ற உயர் விளைச்சல் தரக் கூடிய நெல் ரகமாக இருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

எந்த ரகமாக இருப்பினும் சான்று பெற்ற விதைகளை தேர்வு செய்வது உயர் விளைச்சலை உறுதி செய்யும் என்று விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் மு.மதியழகன் கூறினார்.

## விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் விதைப்பரிசோதனை செய்து கொள்ள வேண்டுகோள்

விழுப்புரம், ஆக.21

திருச்சி மண்டல விதைபரிசோதனை அலுவலர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கான விதைபரிசோதனை நிலையமானது விழுப்புரம் புதிய பேருந்து நிலையதிற்கு அருகில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் முதல் தளத்தில் செயல்பட்டுவருகிறது. இந்நிலையத்தில் விதைகளின் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரகக்கலப்பு ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வறிக்கை வழங்கப்படுகிறது.

மேலும் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் விவசாயிகள் சாகுபடி செய்யயுள்ள விதைகள் தரமானதாக உள்ளதா என அறிந்து கொண்டு சாகுபடி செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே சாகுபடி செய்யப்படவுள்ள, விதைக்குவியல்களிலுருந்து விதை மாதிரி விதைகளை எடுத்து விதைபரிசோதனை நிலையத்தில் விதை பகுப்பாய்வு செய்து கொள்ளலாம் விதையின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரகக்கலப்பு பரிசோதனை செய்யப்படுகின்றது. நன்கு சுத்தமான மற்றும் தரமான விதைகளை பயன்படுத்துவதால் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

ஒரு விதை மாதிரியினை ஆய்வு செய்திட ஆய்வுகட்டணமாக ரூ.80/–மட்டுமே செலுத்த வேண்டும். ஆய்வு முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பிவைக்கப்படும். எனவே விதைக்கும் முன் விதைகளை பகுப்பாய்வு செய்து விதைத்திட திருச்சி மண்டல விதைபரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம் விழுப்புரம் என்ற முகவரியை அனுகலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# மக்காசோளம் சாகுபடியில் வளமான லாபம் பெற விதைபரிசோதனை செய்வோம்



பெரம்பலூர், ஆக.21

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக கருதப்படுகிறது. சராசரி ஆண்டு மழையளவு 861 மி.மீ பெறப்படுகிறது. மக்காசோளம் பயிர் மாவட்டத்தின் மொத்த பயிர் பரப்பளவில் 76 சதவீதம் இடம் பெறுகின்றன.

மக்காச்சோளம் சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் மாநில அளவில் முதலிடம் வகிக்கிறது. நீர் தேவை குறைவு என்பதாலும், அதிக மகசூல் திறன் கொண்ட பயிர் என்பதாலும் தானியங்களின் அரசி என்று அழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு சுமார் 71 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

தரமான மக்காசோள விதைகளை பயன்படுத்தினால் விவசாயிகள் அதிக விளைச்சலும், கூடுதல் வருமானமும் பெறலாம். மக்காசோள விதையின் முளைப்புதிறன் 90 சதவீதமாகவும், ஈரப்பதம் 12 சதவீதமாகவும், புறத்தூய்மை 98 சதவீதமாகவும் இருக்க வேண்டும். விதைகள் நன்கு திரட்சியாகவும், பதர் மற்றும் பூச்சிகள், நோய் கிருமிகள் அற்று இருத்தல் அவசியம்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட மைய நூலகம் மேல் புறம் துறைமங்கலம், பெரம்பலூர் - 621220 என்ற முகவரியில் செயல்படுகிறது. இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளுடன், மக்காசோளம் விதைகள் 300 கிராம் அனுப்பி விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

ஆகவே, விதைகளின் தரம் அறிய விதை பரிசோதனை அவசியம் என விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர் ரெ.ஆஷாலதா தெரிவித்துள்ளார்.

# வாழையூர் கிராமத்தில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சிறப்பு முகாம் நடந்தது




திருச்சி, ஆக.21

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் தாலுகா எம்.ஆர். பாளயத்தில் உள்ள நாளந்தா வேளாண்மைக் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சிறப்பு முகாம் வாழையூர் கிராமத்தில் 16.8.24) துவங்கி 22.8.24 வரை நடைபெறுகிறது. இதன் துவக்க விழாவானது வாழையூர் கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் அல்லி இங்கர்சால், நாளந்தா வேளாண்மைக் கல்லூரின் நிறுவனர் மற்றும் தாளாளர் தலைமை வகித்தார். இதனை தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.சேகர் சிறப்புரை வழங்கினார்.

மேலும் வாழையூர் ஊராட்சி மன்ற தலைவர் நி.லோகேஷ்வரி, வாழையூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆங்கிலத்துறை ஆசிரியர் சு.கானிக்கைராஜ் மற்றும் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இணைப்பேராசிரியர் முனைவர் பா.குணா, கலந்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் க. கண்ணன் வரவேற்புரை வழங்கினார். இந்த நாட்டு நலப்பணித்திட்டதின் சிறப்பு முகாமின் திட்டத்தைப் பற்றி கல்லூரியின் இளங்களை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தெளிவாக எடுத்துரைத்தனர். இவ்விழாவில் ஏராளமான கிராமப் பொது மக்கள், மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இதனை தொடர்ந்து போதைப்பொருட்கள் இல்லாத சமுதாய விழிப்புணர்வு பேரணியை கல்லூரி முதல்வர், ஊராட்சிமன்றத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் துவக்கி வைத்தனர். இறுதியில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இளங்களை இரண்டாம் ஆண்டு மாணவி தீ.மீனா நன்றியுரை வழங்கினார். இவ்விழா சிறப்பாக செயல்பட நாட்டு நல பணித்திட்ட அலுவலர் அ.விக்னேஷ்வர் ராஜ் வழிவகுத்தார்.

# விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி



சிவகங்கை, ஆக.21

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல் படுத்தப்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை புத்தாக்கத் திட்டம் (TNIAMP) - PHASE - 4 - கீழ் வைகை உபவடி நிலப்பகுதி திட்டத்தில் விரிவாக்க அலுவலருக்க஌ுக்கான பயிற்சி சிவகங்கை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கில் 20.08.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியினை சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) லட்சுமி பிரபா, தலைமையேற்று துவக்கி வைத்தார். வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) எம்.மதுரைசாமி முன்னிலை வகித்தார். முதல் நாள் பயிற்சியாக சென்னை, Multi Disciplinary Project Unit (MDPU)) வின் Center For Excellence in Change Management (CEC) நிலையத்தின் Maser trainer கூடலிங்கம் கலந்து கொண்டு விரிவாக்கப் பணியாளர்களுக்கான பயிற்சி அளித்தார்.

இப்பயிற்சியில் ஜா.இரவிசங்கர், வேளாண்மை உதவி இயக்குநர், மானாமதுரை மற்றும் சிவகங்கை, இளையான்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் என 30 அலுவலர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை மானாமதுரை வேளாண்மை அலுவலக அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

வேளாண்மை துணை இயக்குநர் (நுண்ணீர் பாசன திட்டம்) செல்வி, வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) எம்.காளிமுத்து, வேளாண்மை அலுவலர்கள் செல்லத்துரை, ஜைனுல் பௌஜியா ராணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பாரம்பரிய நெல் வகைகளை ஊக்குவித்தல் மற்றும் சாகுபடி குறித்து பயிற்சி

கிருஷ்ணகிரி, ஆக.21

கிருஷ்ணகிரி வட்டாரம் பெரியமுத்தூர் கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் அட்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான நெற்பயிருக்கு பாரம்பரிய நெல் வகைகளை ஊக்குவித்தல் மற்றும் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு வெ.சுரேஷ்குமார், வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணகிரி, தலைமை தாங்கினார். கலைஞர் அவர்களின் ஒருங்கிணைந்த கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயன்கள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் பெறுதல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். ளு.பிரியதர்ஷினி, வேளாண்மை அலுவலர், (ஊஜ) வேளாண்ம இணை இயக்குநர் அலுவலகம், கிருஷ்ணகிரி நெல்லில் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்தும் அவற்றின் பயன்கள் மற்றும் விதை கிராம திட்டம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இந்நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய வு.சக்திவேல், வேளாண்மை அலுவலர், பண்ணை மேலாளர், மண்டல ஊரக வளர்ச்சி – கே.ஆர்.பி. டேம் நெற்பயிருக்கு பின் பயறு வகை சாகுபடி குறித்தும், அவற்றின் முக்கியத்துவம் நெல்லில் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் விதைப்பின் போது விதை நேர்த்தி, பின்னர் ஒருங்கினைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகள், நுண்ணூட்ட உரமிட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் நெல் நடவு செய்த மூன்று நாட்கள் கழித்து அவசியம் இட வேண்டும்.

அறுவடைக்கான உத்திகள், அறுவடை பின் சேய் நேர்த்திகள் போன்ற தொழில்நுட்பங்களை சரியான முறையில் பின்பற்றுவதால் கூடுதல் மகசூல் பெற எளிய வழிமுறைகளை விளக்கி கூறினார். ச.எலிசபெத் மேரி, வேளாண்மை அலுவலர் வேளாண்மை துறையில் தற்போது செயல்படுத்தப்படும் பயறுவகை மற்றும் சிறுதானியங்களுக்கான மானியம் மற்றும் சொட்டுநீர் பாசனம் அமைத்தல், துணை நீர் மேலாண்மை திட்ட மானியங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். தனலட்சுமி, வேளாண்மை அலுவலர், தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் / வீரிய இரக நெல் இரகத் தேர்வு இந்த பருவத்திற்கேற்ற நெல் இரகங்கள் தற்போது கிருஷ்ணகிரி வட்டாரத்தில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் கிடைக்கும்.




நெல்லில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி கூறினார், இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள், முத்துசாமி, வி.விஜயன் ஆகியோர் பங்கேற்று கலைஞரின் ஒருங்கிணைந்த கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் பயன்கள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் பெறுதல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். மேலும் வேளாண்மை துறையில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டம் பற்றி கூறினர். பூ,சன்முகம், பார்வதி உதவி தொழில்நுட்ப மேலாளாகள் அட்மா திட்டம் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் விவசாயி களுக்கு விளக்கி கூறி முன்னேற்பாடு பணிகள் செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பரமத்தி வட்டாரத்தில் நிலக்கடலை ஆதார விதை பண்ணை ஆய்வு

நாமக்கல், ஆக.21

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரத்தில் நடந்தை கிராமத்தில் முத்துசாமி என்பவரது தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை ஆதார விதை பண்ணை டிஎம்பி 14 மற்றும் சித்தம் பூண்டி கிராமத்தில் தமிழரசி, தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை ஆதார விதை பண்ணை வி ஆர் ஐ 9 ஆகிய விதை பண்ணைகளை நாமக்கல் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் உதவி இயக்குனர் சித்திரைச் செல்வி மற்றும் பரமத்தி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுதா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் போது விதைப்பண்ணையின் முக்கியத்துவம், பயிர்களின் எண்ணிக்கையை பராமரித்தல், ஜிப்சம் இடுதல் மற்றும் மண் அணைத்தலின் முக்கியத்துவம், நுண்ணூட்டச் சத்து மேலாண்மை, பூச்சி நோய் தாக்குதல் இன்றி பராமரிக்க வேண்டியதன் அவசியம், பூக்கும் சமயத்தில் நிலக்கடலை ரிச் அடிப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துரைத்தனர். ஆய்வின் போது பரமத்தி வட்டார உதவி விதை அலுவலர்கள் ராதாகிருஷ்ணன் மற்றும் அசோக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

Stanes




பயோ நெமட்டான்

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

பயன்படுத்துவீர்...

# பயோ நெமட்டான்

## "நூற்புழுக்களின் எதிரி"

இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938